# நிலவியல் பின்புலத்தில் நெய்தல் நில மக்களின் தொழில்சார் முனைவுகள்: சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**ந. நிதர்சனா**
*விரிவுரையாளர், தமிழ்த்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*

## அறிமுகம்

*தமிழ்ச் சமூக வரலாற்றில் சங்க காலம் பொருளாதாரமும் பண்பாடும் ஒருங்கிணைந்த காலமாக விளங்குகிறது. இக்காலத்தில் மனித வாழ்க்கை நிலவியல் சூழலை அடிப்படையாகக் கொண்டிருந்தது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலப்பகுப்புக்களின் அடிப்படையில் உருவான தொழில்சார் சமூக அமைப்புகள் முக்கியமானவை. நிலவியல் அமைப்பின் அடிப்படையில் பரதவர்கள் நெய்தல் நிலத்தைச் சார்ந்தவர்கள். கடலோரப் பகுதிகளில் வாழ்ந்த இவர்களின் வாழ்க்கை முறையும் தொழில்களும் கடலின் இயல்பை மையமாகக் கொண்டவையாக அமைந்திருந்தன. சங்க இலக்கியங்களில் நெய்தல் நிலமக்கள் பரதவர், நுளையர், உமணர் எனப் பல்வேறு பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இச்சொல்லாட்சிகள் யாவும் தொழில்சார் அடையாளங்களையே வெளிப்படுத்துகின்றன. மீன்பிடித்தல் இவர்களது அடிப்படைத் தொழிலாகக் காணப்பட்டாலும் அதுமட்டும் அவர்களின் வாழ்வாதாரமாக அமையவில்லை. கடலை மையமாகக்கொண்டு பல்வேறு துணைத்தொழில்களையும் மேற்கொண்டுள்ளனர். இத்தொழில்கள் சங்ககாலத் தமிழகத்தின் பொருளாதார அமைப்பை இயக்கிய முக்கிய சக்தியாகவும் அமைந்தன. சங்க இலக்கியங்கள் பரதவ மக்களின் முதன்மைத் தொழில்கள் பற்றியும் துணைத் தொழில்கள் பற்றியும் பதிவு செய்துள்ளன. ஆனால் நெய்தல் நில*

மக்களின் தொழில்கள் பற்றிச் செய்யப்பட்ட பெரும்பாலான ஆய்வுகள் மீன்பிடித்தல் என்ற ஒரே அடையாளத்திற்குள் சுருக்கப்பட்டுள்ளன. பரதவர்களின் குறுந்தொழில்கள் உரிய கவனத்தைப் பெறவில்லை. இந்த ஆய்வு சங்க இலக்கியங்களின் வழி அறியலாகும் பரதவர்களின் பெருந்தொழில்களையும் குறுந்தொழில் களையும் அடையாளங் காணுவதோடு, நெய்தல் நிலத்தின் இயற்கைச்சூழல் பரதவர்களின் தொழில்கள் உருவாகவும் வளரவும் எவ்வாறு அடிப்படையாக அமைந்தன என்பதையும் இவர்களுடைய தொழில்கள் எவ்வளவு சமூகத்தேவையுடன் இணைந்தவை என்பதையும் ஆராயும் முயற்சியாக அமைகிறது. பரதவர்கள் பிரதான தொழிலாக மீன்பிடியையும் பல்வேறு குறுந்தொழில் களையும் மேற்கொண்டுள்ளனர் என்பதும் அவர்களது தொழில்கள் சங்ககாலப் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றின என்பதும் இவ்வாய்வின் கருதுகோளாகும். சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் இவ்வாய்வின் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன. விளக்கமுறைத் திறனாய்வின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. சங்ககாலப் பொருளாதார வளர்ச்சியில் பரதவர்களின் பங்களிப்பை அறிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

**மீன்பிடித்தல்**

கடல்சார் சூழலைப் பின்புலமாகக்கொண்டு வாழ்ந்த பரதவர்கள் மீன்பிடித்தலையே தமது பிரதான தொழிலாகக் கொண்டனர். கடலின் தன்மை, பருவநிலை மாற்றங்கள் என்பவற்றை நுணுக்கமாக அறிந்திருந்தனர். பரதவர்களிடம் மரம், தெப்பம், நாவாய், மதலை, ஆனம் , கட்டுமரம், புணை, திமல், அம்பி, தோணி, படகு முதலாக பல்வேறு அளவினையுடைய கலன்கள் இருந்தாலும் திமில், அம்பி, தோணி என்பவற்றையே மீன்பிடித்தொழிலக்குப் பயன்படுத்தி யுள்ளனர். இப்படகில் வலை, எறியுளி, தூண்டில், பறி முதலான மீன்பிடிக்கருவிகளை ஏற்றிச் சென்று பலவகையான மீன்களைப் பிடித்துள்ளனர். கடலில் மீன்பிடித்தல் மட்டுமன்றி நீர்நிலைகளான ஆறு, குளம், ஏரி போன்றவற்றிலும் வயல் வெளிகளிலும் மீன் பிடித்துள்ளனர்.



“கதிர் மூக்கும் ஆரல் கீழ்ச்சேற்று ஒளிப்ப
கணைக்கோட்டு வாளை மீநீர்ப் பிறழ
..........................................
உறல் வேல் அன்ன ஒண்கயல் முக்கும்” (புறம்., 249)

என்று பொய்கையில் ஆரல், வாளை, ஆமை, வரால், கயல் போன்ற மீன்களை வலைஞர்கள் பிடித்த காட்சியைப் புறநானூறு பதிவு செய்துள்ளது. வயற்பரப்பைக்கொண்ட மருத நிலம் நீர்வளம் நிறைந்ததாக அமைந்திருந்தது. இவ்வாறான வயல் வெளிகளில் மீன்கள் காணப்பட்டதை,

“பூத்தமா அத்துப் புலால் அம்சிறுமீன்” (ஐங்குறு., 10)

எனவும் மருதநில மக்கள் வயல்களில் பிடிக்கப்பட்ட ஆமை, மீன் என்பவற்றைச் சமைத்து உண்டமையை,

“முள்ளெயிற்றுப்பாண் மகளின் கெடிறுசொரிந்த”
(ஐங்குறு., 47)

எனவும் ஐங்குறுநூறு பதிவு செய்துள்ளது. கடற்கரைகளில் ஆறும் கடலும் சேர்ந்து நிற்கும் நீர்ப்பகுதி உப்பங்களி எனப்படும். உப்பங்களிகளில் காணப்பட்ட மீன்களைப் பிடித்துள்ளமையை,

“..........பாணன்
சூழ்கழி மருங்கி னாணிரை கொளீஇச்
சினைக்கயல் மயக்கும் துறைவன்” (ஐங்குறு., 111)

என உப்பங்களிகளில் சினைப்பட்ட மீன்களைத் தூண்டில் கயிற்றில் இரையை மாட்டிவைத்துப் பிடித்துள்ளமையை ஐங்குறுநூறு கூறுகிறது. பரதவர்கள் பகலில் மட்டுமன்றி இரவிலும் மீன்வேட்டைக்குச் சென்றுள்ளனர். இரவுப்பொழுதில் படகில் விளக்கு வைத்து மீன்பிடித்த செய்தியைச் சங்கப்பனுவல்கள் பதிவு செய்துள்ளன. இரவில் மீன்பிடிக்கும் பழக்கம் இருந்ததை,

“துணைச்சுறா வழங்கலும் வழங்கும் ஆயிடை
எல்லிமில் பனிக்கடல் மல்குசுடர் கொளீஇ
எமரும் வேட்டம்” (நற்., 67)

எனவும்,

"கயிறுகடையாத்த கடுநடை எறிஉளித்
திண்திமில் பரதவர் ஒண்சுடர் கொளீஇ
நடுநாள்வேட்டம் போகி வைகறைக்
கடல்மீன் தந்துகானல் குவைஇ" (நற்., 388:2-6)

*என இரவில் மீன்பிடிக்கச் செல்லும் போது சில சுறாமீன்கள் கட்டுக்கடங்காது திரிவதைக் கண்டு கனன்று எரியும் தீப்பந்தத்தின் ஒளியால் அவற்றின் போக்கினை அறிந்து தப்பாமல் குறி வைத்து உறுதியான கயிற்றினால் இணைக்கப்பட்ட எறியுளியினைப் பயன்படுத்தி, சுறாமீன்களைத் தாக்கிப்பிடித்த காட்சியை நற்றிணை பதிவு செய்துள்ளது.*

## மீன் விற்றல்

*வினையே ஆடவர்க்கு உயிரெனக் கூறப்பட்டாலும் மகளிரும் தாம் வாழ்ந்த நில இயல்பிற்கேற்ப தொழில் செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தனர். ஆடவர் பிடித்துவரும் மீன்களை மகளிரே கொண்டு சென்று விற்பனை செய்ததைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.*

"பலபடு அமைத்துக் கொள்ளை சாற்றி" (அகம்.,30)

*எனப் பிடிக்கப்பட்ட மீன்களைப் பல கூறுகளாக்கி அவற்றுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டு விற்கப்பட்டதையும்,*

"ஓங்கு நிரைப்பரப்பின் வாங்குவிசைக்கொளீஇத்
திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்
தழைணி அல்குற் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப்பகரம்" (அகம்.,320:1-4)

*தமையன்மார் வேட்டையாடி வந்த வன் சுறா மீன்களைத் தங்கையர்கள் விழாக்கோலம் காணும் வீதிகளில் கொண்டு சென்று விலை கூறி விற்றுள்ளமையையும் அகநானூறு சித்திரித்துள்ளது. பரதவர்கள் பிடித்து வந்த மீன், இறால் என்பவற்றை பரதவ மகளிர் பண்டமாற்று முறை மூலம் தானியமாக மாற்றிய காட்சியை நற்றிணையும் (நற்., 239:3) அகநானூறும் (அகம்., 340:14-15) பதிவு செய்துள்ளன.*



## மீன் உணக்கல்

*தினம்தோறும் கடலிற்குச் சென்று மீன்பிடித்து வருபவர்கள் பரதவர்கள். மீன் மிகுதியாக அகப்படும் நாட்களில் அவற்றை பதப்படுத்தி வைத்துள்ளனர். கடற்கரைகள் மணற்பரப்புகளே மீனை உணக்குவதற்கான களமாகப் பயன்பட்டது. நெய்தல் நில மகளிரே மீன் உணக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளனர். தங்கள் தோழியரோடு காலையில் வந்து கடற்கரை மணல்மீது உணக்குவதற்கான மீனைத் தூவுவர். பின்னர் அம்மீன்களைப் பறவைகள் கவர்ந்துவிடாமல் பகல் முழுவதும் அங்கேயே காவல் காப்பர். மாலை வேளையானதும் உலர வைத்த மீன்களை எடுத்துக்கொண்டு வீடு திரும்புவர் இக்காட்சியினை,*

"நிணற்சுறா அறுத்த உணக்கல்வேண்டி
இனப்புள் ஓப்பும் எமக்கு" (நற்., 45:6-7)

"கொழுமீன் உணங்கல் படுபுள் ஓப்பி
எக்கர் புன்னை இன்நிழல் அடைஇ" (அகம்., 20)

*என நற்றிணையும் அகநானூறும் பதிவு செய்துள்ளன. பரதவர்கள் பிடித்து வந்த மீன்களும் இறால்களும் நிலா ஒளி போல காணப்படும் வெண்மணலில் நன்றாக உலர்ந்து பக்கம் எங்கும் புலால் நாற்றம் பரவி வீசும் (புறம்., 320) என்பதையும் புன்னையின் நறுமணம் அப்புலால் நாற்றத்தை மாற்றும் (நற்., 63). இவ்வாறு மீன் உணக்கல் தொழில் பற்றிய பதிவுகளைச் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணமுடிகிறது.*

## மீன் நெய் உற்பத்தி

*கொழுப்புள்ள பெரிய மீன்களை உணக்கும் போது அதிலிருந்து மீன் நெய்யைப் பெற்றுள்ளனர். மீனின் நெய்யை எரிபொருளாக்கி இரவுப்பொழுதில் விளக்கு எரித்துள்ளனர். அவ்விளக்குச் சுடரைக் கிளிஞ்சல் பொத்திக் காத்துள்ளனர். அதனை*

"மீனெய் அட்டிய கிளிஞ்சல் பொத்திய
சிறுதீ விளக்கில் துஞ்சும்" (நற்., 175:3-4)

"மீன்நிணம் தொகுத்த ஊண்நெய் ஒண்சுடர்
நீல நிறப்பரப்பில் தயங்குதிரை உதைப்ப" ( நற்., 215)

என மீனில் இருந்து நெய் தயாரிக்கப்பட்டதையும் அது பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதையும் நற்றிணை கூறுகிறது.

### உப்பு விளைவித்தல்

நெய்தல் நில மக்கள் கடற்கரைகளில் உப்பங்களிகளை அமைத்து கடல் நீரை ஆவியாக்கி உப்பை விளைவித்துள்ளனர். சிறுகுடிப்பரதவர்கள் கடற்கரையை ஒட்டிய இருங்கழியில் உப்பை விளைவித்தமையை,

"சிறுகுடிப்பரதவர்
இருங்கழிச்செறுவில் உழாது செய்த
வெண்கல் உப்பின்" (அகம்., 140)

என்ற அகநானூற்றின் அடிகளில் காணலாம். நெல்லிற்கும் உப்பிற்கும் இடையில் விலை வேறுபாடு இருந்துள்ளது. ஆனால் உமணர்கள் உப்பிற்கு நெல்லின் விலையைக் கூறி விற்றுள்ளமையை,

"செந்நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்
சேரி விலை" (அகம்., 140)

"நெல்லும் உப்பும் நேரே யூரிர் கொள்ளீரோவெனச்
சேரிதொறும் நுவலும்" (அகம்., 290)

என வரும் அகநானூற்றின் அடிகள் உறுதிப்படுத்துகின்றன. மழை பெய்தாலும் பொய்த்தாலும் கவலைப்படாதவர்கள் உமணர்கள். மழை பெய்தால் நெற்பயிர் செழித்து புற வருவாயினைத் தரும். மழை பொய்த்தால் கழிப்பகுதிகளில் வெள்ளுப்பு விளைந்து காணப்படும். சங்ககாலத்தில் உப்பு வணிகம் சிறப்பாக நடைபெற்றுள்ளது. உமணர்கள் உப்பு விற்கச் செல்லும் முறைகளும் அவர்கள் உப்பு விற்கும் திறனும் சங்க இலக்கியங்களில் விரிவாகப் பதிவு செய்யப் பட்டுள்ளன. உப்பு விற்கும் உமணர்கள் பொருளாதார முறையில் முன்னேறிய பெரும் செல்வந்தர்களாகவும் விளங்கியுள்ளனர்.



### முத்துக்குளித்தல்

நெய்தல் நில மக்கள் முத்துக்குளிக்கும் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். முத்துக்குளிப்போர் ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுக்கும் போது பரதவர்கள் தங்கள் படகுகளிலிருந்து சங்குகளை ஒலிப்பர். தீயன அகல்தல் வேண்டி, சங்கொலித்தல் பண்டைத்தமிழரின் மரபாகும். பரதவர்கள் முத்தெடுக்கக் கடலினுள் மூழ்கும் போது அங்கு சுற்றித்திரியும் கொல்லுந் தன்மையுடைய சுறா மீன்களை விலக்கிச் சென்று முத்தெடுக்கும் காட்சியை,

"இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்
ஒலிதலைப்பணிலம் ஆர்ப்பக் கல்லென
கலிகெழு கொற்கை யெதிர்கொள வழதரும்" (அகம்., 27)

என அகநானூறு சித்திரிக்கின்றது. கொற்கைத் துறைமுகத்தில் விளையும் முத்தே சிறப்புடையதாகவும் உலகப் புகழ் பெற்றதாகவும் விளங்கியது. வலம்புரி முத்து எடுப்பதற்காகப் பரதவர்கள் பெரிய படகுகளில் சென்றதை,

"இலங்கிரும் பரப்பின் எறிசுறாநீக்கி
வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்" (அகம்., 350:10-11)

என அகநானூறு கூறுகின்றது.

### சங்கு எடுத்தல்

வலம்புரி முத்தெடுத்ததைப்போலவே வலம்புரிச் சங்குகளையும் கடலில் இருந்து எடுத்துள்ளனர். சங்ககால மகளிர் சங்குகளை அறுத்துச் செய்யப்பட்ட வளையல்களை அணிந்திருந்தனர். சங்கினால் ஆக்கப்பட்ட வளையல்களை அணிவது மங்கலமாகக் கருதப்பட்டது. சங்கினைச் சிறு வாளினால் அறுத்து வளையல் செய்யப்பட்டதை

"வல்லோன்
வாளரம்பொருத கோள் நேர் எல்வளை" (நற்., 77)

என்ற நற்றிணை அடிகள் கூறுகின்றன. சங்கு வளையல்களில் கொடிகள், பூக்கள், விரிகோடுகள் முதலியவை அமைத்து அவற்றை அழகுறச் செய்தனர்.

"அறம் போல் அல்வளை" (ஐங்குறு., 106)

"கடற்கோடு அறுத்த அரம்போல் அல்வளை" (ஐங்குறு., 194)

"கோடீர் இலங்குவளை" (ஐங்குறு., 31)

போன்ற ஐங்குறுநூற்று அடிகள் வளையல்கள் செய்யும் தொழில் சமூகத்தில் பரவலாக நடைபெற்றதைக் காட்டுகின்றன.

## கள் தயாரித்தல்

சங்க கால மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் பானமாகக் கள் இருந்துள்ளது. பெண்ணை(பனை) மரத்தில் இருந்து எடுக்கப்பட்ட கள்ளை விரும்பிக் குடித்துள்ளமையை,

"இரும் பனந் தீம்பிழி உண்போர் மகிழும்" (நற்., 38)

என்ற அடிகள் மெய்ப்பிக்கின்றன.

"என்ஆ வது கொல் தானேமுன்றில்
தேர் தேர் சுவைய திரள் அரை மாஅத்துக்
கோடைக்கு ஊழ்த்த கமழ்நறுந் தீங்களிப்
பயிர்ப்புற பலவின் எதிர்ச்சுளை அளை
.................................................
பாப்புக்கடுப்பு அன்ன தோப்பி" (அகம்., 348)

எனக் கள் தயாரிக்கும் முறையை அகநானூறு பதிவு செய்துள்ளது. பரதவர்கள் கடலை மையமாகக் கொண்ட பிரதான தொழில்களை விடவும் பல குறுந்தொழில்களையும் மேற்கொண்டுள்ளனர். பரதவச் சமூகத்தினருக்கும் உமணர்களுக்கும் இன்றியமையாத தேவைகளான உப்பு வண்டிகள், செல்வந்தர்கள் பயணிக்கும் தேர்கள், படகுகள் என்பவற்றைச் செய்யும் தச்சர்கள், மீன் பிடிக்கருவிகள் செய்யும் கொல்லர்கள், குடிசைகள் அமைப்போர், பொற்கொல்லர் முதலாகப் பல குறுந்தொழில்களை நெய்தல் நிலத்தவர்கள் மேற்கொண்டமைக்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் கடற்கரை சார்ந்த பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த உழைப்பாளிச் சமூகமாகப்



பரதவர்கள் படம் பிடிக்கப்பட்டுள்ளனர். மீன்பிடித்தல் இவர்களின் முதன்மைத் தொழிலாக இருந்துள்ளது. கடலின் அலைச்சல், காற்றின் திசை, பருவ மழை போன்ற இயற்கை மாற்றங்களை உணர்ந்து தொழிலாற்றிய இவர்களின் அறிவு அனுபவ அடிப்படையிலான அறிவியல் எனக் கூறலாம். இது அவர்களை வெறும் தொழிலாளர்களாக அன்றி கடல்சார் நிபுணர்களாக உயர்த்திக் காட்டுகிறது. மீன்பிடித்தலுடன் மட்டும் நில்லாமல் கடலை அடிப்படையாகக்கொண்டு உப்பு உற்பத்தி, முத்து எடுத்தல், சங்கு எடுத்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிகத்திலும் ஈடுபட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தனர். பரதவ மக்களின் தொழில்கள் வெறும் வாழ்வாதாரத் திற்கான அடிப்படையாக மட்டுமமையாமல் பண்டைத்தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு, பொருளாதாரம் மற்றும் உலகத் தொடர்புகளை வடிவமைத்த அடித்தளமாகவும் அமைந்தன எனலாம்.

## உசாத்துணை நூல்கள்


1. சுப்பிரமணியன்.ச.வே., சங்க இலக்கியம்(முழுவதும்), 2003, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. சஞ்சீவி.ந., சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், 1971, சென்னை.
3. சுந்தரம்.மெ., சங்ககாலத்தமிழரின் கடல் வணிகம்,1978, பாரிநிலையம், சென்னை.
4. முத்து கண்ணப்பன்.தி., சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், 1978, அதிபத்தர் பதிப்பகம், சென்னை.
5. சசிவல்லி.வி.சி., பண்டைத்தமிழர் தொழில்கள், 1989, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. வித்தியானந்தன்.சு., தமிழர் சால்ப,1971, பாரிபுத்தகப் பண்ணை, சென்னை
7. சாம்பசிவன்.ச., தமிழ் இலக்கியத்தில் நெய்தல் திணை, 1964, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.